# நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்... முதல்வர் திறப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி...

அதன்படி, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில் 3000 மெ. டன் கொள்ளளவில் 4 கோடியே 96 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் 2000 மெ. டன் கொள்ளளவில் 4 கோடியே 2 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் 3000 மெ.டன் கொள்ளளவில் 5 கோடியே 23 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, சிவகங்கை மாவட்டம், சிங்கம்புனரி வட்டத்தில் 3000 மெ.டன் கொள்ளளவில் 4 கோடியே 96 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, வேலூர் மாவட்டம், பக்களப்பள்ளி வட்டத்தில் 2000 மெ.டன் கொள்ளளவில் 4 கோடியே 2 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, திருவள்ளூர் மாவட்டம், இராமகிருஷ்ணராஜபேட்டை வட்டத்தில் 2000 மெ.டன் கொள்ளளவில் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், என 26 கோடியே 97 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள்;

விவசாயிகளின் நலன் கருதி டெல்டா மாவட்டங்களான திருவாரூர் மாவட்டத்தில் தோலி, கற்பகநாதர் குளம், பழையவலம், மேலவாசல் மற்றும் ஆலத்தூர் ஆகிய 5 கிராமங்களிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் பெருந்தோட்டம், பெருமங்கலம், காஞ்சிவாய் ஆகிய 3 கிராமங்களிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் குறுமாணக்குடி மற்றும் மேலவாழக்கரை ஆகிய 2 கிராமங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் பெருங்களூர் கிராமத்திலும் என 11 கிராமங்களில் தலா 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மொத்தம் 6 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்;

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகி கொள்முதல் செய்யப்படும் ஒரு நெல்மணிக்கூட வீணாகக் கூடாது என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சொல்லை செயல் வடிவமாக்கும் விதமாக 2023 -24 நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.


அதன்படி டெல்டா மாவட்டங்களான திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மூவாநல்லூர் கிராமத்தில் 20 கோடியே 90 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 33,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், நீலத்தநல்லூர் கிராமத்தில்

8 கோடியே 86 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் மற்றும் டெல்டா அல்லாத பிற மாவட்டங்களான காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜபாத் வட்டம், கட்டவாக்கம் கிராமத்தில் 14 கோடியே 42 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 15,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிலாவட்டம் கிராமத்தில் 14 கோடியே 42 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 15,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், என 58 கோடியே 61 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள்;

என மொத்தம் 92 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள், 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், பொது விநியோக திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் வட்ட செயல்முறை கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்தும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் கிராமம் மற்றும் திருப்போரூர் வட்டம், செம்பாக்கம் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், கொன்னையூர் கிராமம், கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், சிவாயம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், திருமழிசை கிராமம், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், லக்கயன்கோட்டை கிராமம் ஆகிய இடங்களில் மொத்தம் 6000 மெ.டன். கொள்ளளவுடன் 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 6 கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# #GetOutModi - எக்ஸ் சமூகவலைதளத்தில் டிரெண்டிங்!

சென்னை, பிப். 21-

GetOutModi என்ற Hashtag எக்ஸ் சமூகவலைதளத்தில் தற்போது டிரெண்ட் ஆகி வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசு தமிழ்நாட்டை அனைத்து வகைகளிலும் வஞ்சித்து வருகிறது. இதனால் அவர் தமிழ்நாடு வரும்போதெல்லாம் Go Back Modi என்ற Hashtag சமூகவலைத்தளங்களில் டிரெண்டாகும். இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு நிதி அளிக்காத பிரதமர் மோடிக்கு இனி Get Out Modiதான் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விமர்சித்திருந்தார். அதன்படி, தற்போதே சமூகவலைதளங்களில் இந்த வார்த்தை டிரெண்ட் ஆகி வருகிறது. குறிப்பாக எக்ஸ் சமூகவலைதளத்தில் Get Out Modi என்ற Hashtag டிரெண்ட் ஆகி வருகிறது. தி.மு.க.வினர், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் Get Out Modi என்ற Hashtagஐ டிரெண்ட் ஆக்கி வருகின்றனர்.

# ‘சுய நினைவற்றவரைப் போல் பிதற்றித்திரிகிறார்’ பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம்!

சென்னை, பிப்.21-

**சுயநினைவற்றவரைப்போல் பிதற்றித் திரிகிறார் தமிழ்நாட்டு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:–

திமுக அரசு சொல்வதை செய்யும் அரசு, சொல்வதற்கு மேலாகவும் மக்கள் சேவை செய்யும் அரசு, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதலமைச்சர் ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ அவர்கள் மக்களுக்கு தெரிவித்ததைப்போல், “நான் ஓட்டு போட்டவருக்கு மட்டும் முதலமைச்சரல்ல, ஓட்டு போடாதவர்களுக்கும் நானே முதலமைச்சர்”, அந்த வகையில் நாம் ஏன் திமுக அரசுக்கு ஓட்டுப் போட தவறிவிட்டோம் என்று சிந்திக்கின்ற வகையில் இந்த திராவிட மாடல் ஆட்சி அமையும் என்று சூளுரைத்தார். கழக ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை 90% மேற்பட்ட வாக்குறுதிகள் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அவற்றில் சில, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞரின் கனவு இல்லத்திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும்48, மக்களுடன் முதல்வர், தொழில்துறை 4.0 திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், இல்லம் தேடி கல்வி, இப்படி நூற்றுக்கணக்கான சிறப்புத் திட்டங்களை வரிசைப்படுத்தி கொண்டே போகும் அளவிற்கு தமிழ்நாடு மக்களின் வாழ்வில் விடியலை உருவாக்கும் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

**தி.மு.க. செல்வாக்கு உயர்வு!**

அதனால்தான் அண்மையில் ‘இந்தியா டுடே’ மற்றும் ‘சி ஓட்டர்ஸ்’ அமைப்பினர் நடத்தியக் கருத்துக்கணிப்பில் கடந்தாண்டு தி.மு.கழகத்திற்கு இருந்த மக்கள் செல்வாக்கு 47 சதவிகித்திலிருந்து 52 சதவிகிதமாக உயர்ந்திருப்பதாகவும், இப்போது மட்டுமல்ல, எப்போதும் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும், தி.மு.கழகம் அமோக வெற்றி பெறும் என்றும், Most Popular CM in Home State எனும் தலைப்பில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் கடந்தாண்டு பிப்ரவரி திங்களில் 36 சதவிகிதமாக இருந்த மக்கள் செல்வாக்கு, இந்தாண்டு பிப்ரவரி திங்களில் 57 சதவிகிதமாக உயர்ந்து, இந்தியாவின் மிகப்பெரிய மாநிலங்களில் முதலிடத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் இடம்பெற்றிருப்பது விஞ்ஞானப்பூர்வமாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள முடியாத அரசியல் அரவேக்காடு அண்ணாமலை அவர்கள் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் ஒருமையில் பேசுவது அரசியல் அநாகரிகத்தின் உச்சமாகும்.

நீட், புதிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு, மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்படுவது என அனைத்திலும், தமிழக மக்கள் விரோத அரசியல் செய்யும் அண்ணாமலை தொடர்ந்து செய்யும் கேலிக்கூத்து நடவடிக்கைகளுக்கு அளவின்றி போய்கொண்டிருக்கிறது. திடீரென்று செருப்பில்லாமல் நடப்பேன் என்று சொல்லி Shoe கால்களுடன் வலம் வருவது, தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொள்வது போன்ற நடவடிக்கைகள் கண்டு நாடே எள்ளி நகையாடுகிறது.

கார்ப்பரேட்களுக்கும், ஆதிக்க சக்திகளுக்கும் ஆதரவாக அரசியல் செய்யும் அண்ணாமலைக்கு திராவிட மாடலைப் பற்றியும், முதலமைச்சர் அவர்களை பற்றியும், துணை முதலமைச்சர் அவர்களை பற்றியும் பேசுவதற்கு எந்தவித மான தகுதியும், அருகதையும் இல்லை.

**அண்ணாமலையின் தற்குறித்தனம்!**

துணை முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் போன்ற



அமைச்சர் பெருந்தகைகளை ‘தற்குறி’ என்று சொல்லுமளவுக்கு, கீழ்த்தரமாகவும், தற்குறித்தனமாகவும் செயல்படும் அண்ணாமலை நிலைக் கண்ணாடி முன்நின்றால் தன்னுடைய தற்குறித்தனங்கள் ஒவ்வொன்றாய் வரிசைக்கட்டி நிற்கும்.

நாவடக்கம் அற்றவர், அநாகரிகமானவர் என்பதை இடைவெளியில்லாமல் தொடர்ந்து நிரூ பித்துக்கொண்டிருக்கிற அண்ணாமலை ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பது நிதர்சனம்.

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமாக பதில் அளித்துள்ளார்.*

# தாய்மொழிகளை காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு;

**‘சூழும் பகைதனில் இருந்து தாய்மொழிகளைக் காப்போம்!**

**தமிழே அறம்! தமிழே அரண்!’**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகே ஆசர்கானா பகுதியில் உள்ள சுரங்கப்பாதையில் மக்கள் போக்குவரத்திற்கு இருசக்கர வாகனங்கள் செல்லும் வகையில் ஏற்பாடு செல்லும் வகையில் அந்தப் பாதையை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் ஆய்வு செய்தனர். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன் மற்றும் வட்ட செயலாளர்கள் உள்ளனர்.

## ஒன்றியத்தின் முதன்மை முதல்வர்

# அன்று மாநகரத்தின் தந்தை - இன்று மாநிலத்தின் தந்தை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றி – பாராட்டு!

சென்னை, பிப்.21-

**வட சென்னை பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசும்போது, “அன்று மாநகரத்தின் தந்தை - இன்று மாநிலத்தின் தந்தை” என்று பெருமிதத்துடன் நன்றி பாராட்டினார்.**

விழாவில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:-

‘நன்றி’ - அது மூன்று எழுத்துகளில் அடங்குகின்ற சொல் அல்ல, வள்ளுவர் பெருந்தகை சொன்னதைப்போல,

“நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது

அன்றே மறப்பது நன்று” என்றார்.

வாக்களித்த மக்களுடைய வாழ்வாதாரம் சிறக்க, நன்றியோடு செயல்படுகின்ற ஒன்றியத்தின் முதன்மை முதல்வர் அவர்களை நன்றியோடு நன்றி பாராட்ட அழைக்கின்றோம்.

நம் முதல்வர் அவர்கள் தான், முதன் முதலில் நேரிடையாக மக்களால் வாக்களிக்கப்பட்டு, முதல் மேயராக சென்னைக்கு தேர்வு செய்யப்பட்ட முதல்



வர். அப்போது அவரை மாநகரத்தின் தந்தை என்று அழைத்தோம்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நம் முதல்வர் அவர்களை, அன்றைக்கு மாநகரத்தின் தந்தையாக இருந்தவர், இன்றைக்கு மாநிலத்தின் தந்தையாக உயர்ந்து நின்றுக்கொண்டிருக்கின்றார்.

கடந்த காலங்களில் வட சென்னை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பத்தாண்டுகள் ஓரங்கட்டப்பட்டிருந்தது. இந்த வட சென்னையை இன்றைக்கு தாய் உள்ளத்தோடு தாயுமானவராக வாரி அணைக்கின்ற முதல்வர் நம் முதல்வர் அவர்கள்.

பாடல் வரிகளிலே சொல்வார்கள், ‘தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு’ என்று. ஆனால் தெய்வமாக இருந்து வீடுகளை தந்து கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள் இன்றைக்கு நம் மேடையில் இருந்து கொண்டிருக்கிறார்.

நம் முதல்வர் வாழ்வாங்கு வாழ வேண்டும். எல்லா புகழும் எய்த வேண்டும், பல்லாண்டு காலம் வாழ வேண்டும், எல்லாப் புகழும் அவரை அடைய வேண்டும், நீண்ட நெடுங்காலம் பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நோய் நொடி இல்லாமல் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ இயற்கையை வேண்டுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.



வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை விழுப்புரம் இல்லத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உடனிருந்தார்.